1990 சனவரி 20]

பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட எல்லைகளிலே அமைக்கப் பட்டிருக்கின்ற தணிக்கைச் சாவடிகளில் இரவு நேரங்களில் அங்கே இருக்கின்ற அலுவலர்களுடைய உதவியோடு நெல் கடத்தப்படுவதாக பரவலாக தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. இன்னும் ஒரு சில இடங்களில் நெல் கடத்தப்படும்போது அவற்றைத் துரத்திச் சென்று பிடிக்கச் செல்கின்ற அலுவலர்களைத் தாக்குவதும், ஜீப்புகளைக் கவிழ்த்துவிட்டு ஓடிவிடுவதும் வாடிக்கையாக இருக்கிறது என்றும் செய்தித் தாள்களிலே பார்க்கிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலைகளைத் தவிர்ப்பதற்காக பறக்கும் படை போன்ற ஒரு அமைப்பை ஏற்படுத்துவதற்கும் பிடிக்கச்செல்கின்ற அலுவலர்களுக்குப் பாதுகாப்புத் தருவதற்கும் அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் ஏற்கெனவே பறக்கும் படை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆங்காங்கு சோதனைச் சாவடிகளில் விரட்டிச் செல்கின்றபோது ஒரு சில தவறுகள் நேர்ந்து இருக்கலாம். அதுபற்றிய விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசுக்குத் தெரிவித்தால் அந்தக் குறிப்பிட்டவர்கள் மீதும் குறிப்பிட்ட சம்பவங்களைத் தொடர்ந்தும் நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உதவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒண்டிப்புதூர் கடலை எண்ணெய் உற்பத்தி ஆலை.

*வினா 4098 திரு. கே. ரமணி:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை சிந்தாமணி சிறப்பங்காடிக்குச் சொந்தமான ஒண்டிப்புதூரில் உள்ள கடலை எண்ணெய் உற்பத்தியாலை சரிவர செயல்படாமலிருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கோவை சிந்தாமணி சூப்பர் மார்க்கெட்டிற்குச் சொந்தமான ஒண்டிப்புதூரில் ஒரு எண்ணெய் ஆலை இருக்கிறது. அந்த எண்ணெய் ஆலை பருத்தி விதையின் மூலமாகவும், சூரியகாந்தி விதையின் மூலமாகவும் எண்ணெய் எடுத்து விற்பனை செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட ஒன்று. ஆனால் அது முழுத் திறனுக்கேற்ப இப்போது இயங்காத சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. அப்படி முழுத் திறனுக்கேற்ப இயக்கப்படாமல்

9-55 மணி

அது இருப்பதற்குக் காரணம், சூரியகாந்தி விதை என்பது போதுமான அளவிற்கு அங்கே கிடைக்கவில்லை. அதனைத் தொடர்ந்து மாற்று ஏற்பாடாக வேர்க்கடலை கொள்முதல் செய்து கடலை எண்ணெய் பிழிந்து விற்கின்ற பணியில் அந்த ஆலை ஈடுபட்டது. ஆனால் வேர்க்கடலை விலையில் ஏற்றத் தாழ்வுகள் அடிக்கடி ஏற்படுகிற காரணத்தாலும் வேர்க் கடலையிலிருந்து கடலை எண்ணெய் பிழிந்து விற்கப்படுகின்ற போது விற்பனை வரி கட்டுகின்ற காரணத்தாலும் வெளிச் சந்தையில் மற்றவர்களோடு போட்டி போட்டு வணிகத்திலே ஈடுபட முடியாத சூழ்நிலையில் அது இப்போது நட்டத்தில்தான் ஓடிக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு மாற்று ஏற்பாடாக 'டாலகேப்' விதை உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தில் இதை கூலி ஒப்பந்த முறையிலே ஒப் படைக்கலாமா அல்லது இதனைத் தனியாகப் பிரித்து ஒரு சங் கத்தை ஏற்படுத்தலாமா என்ற ஆய்வும் அரசின் சார்பாக நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்ற விவரத்தை தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலை வர் அவர்களே, இந்த ஆலை பல ஆண்டுகளாகவே அதனுடைய ஃபுல் கேப்பாசிட்டிக்கு வேலை செய்யாமல்தான் இருந்து வந்திருக் கிறது. அதற்குத் தேவை சூரிய காந்தியின் அல்லது பருத்திக் கொட்டையின் எண்ணெய் அல்ல. பருத்திக் கொட்டை எண் ணெயைத் தமிழ்நாட்டில் ஜனங்கள் சாப்பிடும் பழக்கம் இல்லை. வெளிநாட்டில் நடக்கிறது. உண்மையாக அதில் உற்பத்தி செய்யவேண்டியது கடலை எண்ணெய்தான். அத னால் சூரிய காந்திக்கு ஈடுகொடுக்க முடியாத ஒரு நிலையில் 1500-லிருந்து 2000 டின் எண்ணெய் பிழியக் கூடிய சக்தி உள்ள ஒரு நல்ல ஆலை. அந்த எண்ணெய் பிழிந்ததை உடனே ரீபைன் செய்து ஓ.கே. ஆயில் தயார் செய்து அதுவும் ஆட்ட மெட்டிக்-ஆக அந்த எண்ணெய் பூராவும் போய் செய்யப் படுகிற ஒரு அற்புதமான ஆலை. அந்த ஆலை செயல்படாமல் இருந்ததற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன காரணம் மட்டும் அல்ல, அதுவும் ஒரு காரணம் என்று அந்த ஆலையைப் பார்த்த எனக்கு தெரிய வந்தது. அதைச் செயல் படாமல் கிடப்பில் போட்டு ஒரு குறுகிய அளவுக்கு 500 அல்லது 300 டன் எண்ணெய் மட்டும் உற்பத்தி செய்து அதற்கு மேல் வேண்டிய எண்ணெய் முழுவதையும் காண்டிராக்ட் மூலம் விட்டு அதில் அதிகாரிகள் ஊழல் செய்தார்கள் என்ற விவரம் சொல்லப் படுகிறது. அதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஏதா வது தெரியுமா? அது ஃபுல் கெப்பாசிட்டி ஓர்க் பண்ணினால் லாபம் வரும், நஷ்டம் வராது; ஆகவே அதுபற்றிய ஒரு ஆராய்ச்சியை மேற்கொள்வார்களா என அறிய விரும்பு கிறேன்.

1990 சனவரி 20]

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களை மையமாகக் கொண்டு அரசின் சார்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். அதோடு அதிகாரிகள் தவறுகளுக்கு உடந்தையாக இருப்பதாக ஒரு சந்தேகத்தின் அடிப்படையில் கருத்து தெரிவித்தார்கள். அந்தச் சந்தேகத்தினை மையமாகக் கொண்டும் உரிய பரிசீலனை அரசின் சார்பாக நடத்தப்படும் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பரிசீலனையையும், நடவடிக்கைகளையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உண்மையாக, உறுதியாக எடுத்தால் மிக நல்ல ரிசல்ட் ஏற்படும் என்பது என்னுடைய கருத்து. ஆகவே அதைச் செயல்படுத்துவது வரவேற்கத்தக்கது. அதே நேரத்தில் அந்த இயந்திரங்கள் முழுவதும் எந்தப் பாதுகாப்பும் செய்யாமல் பெயின்ட் கூட அடிக்காமல் ஏராளமான இயந்திரங்களின் பகுதிகள் துருப் பிடித்திருக்கின்றன. அந்த காம்பவுண்டு சுவர் முழுவதும் சுத்தம் செய்யப்படாமல் செடிகள் முளைத்து, பாம்பு உட்பட சகல விஷ ஜந்துக்களும் குடியிருக்கிற ஒரு மோசமான சூழ்நிலையில் இருக்கிறது. ஆகவே அந்த நிலைமையை எமர்ஜன்சியாக, அவசர நிலையாகக் கருதி நடவடிக்கைகள் எடுத்து இயந்திரங்களைப் பாதுகாக்க அதில் துப்புறவு வேலை உடனே செய்ய அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அவசர, அவசிய கருத்துக்களின் அடிப்படையில் அரசு உடன் பரிசீலனையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு காலத்திலே இந்தியா முழுமைக்கும் வழிகாட்டுகின்ற வகையில் நடைபெற்ற கோவை சிந்தாமணி சூப்பர் மார்க்கெட் சமீப ஆண்டுகளில் எந்த அளவுக்கு நஷ்டத்திலேயும், ஊழலிலேயும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பது அரசுக்குத் தெரியும். இந்த ஒண்டிப்புதூரில் இருக்கின்ற கடலை எண்ணெய் உற்பத்தி செய்கின்ற ஆலையிலே வேர்க்கடலை கொள்முதல் செய்கிறார்களே அதிலே தரமான வேர்க்கடலையைக் கொள்முதல் செய்யாத காரணத்தால்தான் மிகப் பெரிய அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டது என்பது அங்கே கோவையிலே எங்களுக்குக் கிடைத்த செய்தி. மிகவும் தரம் குறைந்த அந்த வேர்க்கடலையை லட்சக் கணக்கான ரூபாய்களுக்கு .... (மணியடிக்கப் பெற்றது).

[1990 சனவரி 20

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இசைவுடன் வினாக்கள்-விடைகள் நேரம் சிறிது நீட்டிக்கப் படுகிறது. உறுப்பினர் கேள்வியைச் சுருக்கமாகக் கேட்டால் நன்றாக இருக்கும்.

திரு. இரா. மோகன் : இது மிக முக்கியமான செய்தி. வேர்க்கடலையை அவர்களே, கொள்முதல் செய்யாமல், வேர்க் கடலையைக் கொள்முதல் செய்வதற்கு, தனியாக ஒரு அதிகாரி யைப் போட்டு கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்ய அரசு பரிசீலிக்குமா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை சிந்தாமணி கூட்டுறவு அங்காடியிலே, கடந்த காலத்திலே நடைபெற்ற ஊழல் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். 1984 ஆம் ஆண்டு முதற்கொண்டு அந்த ஊழல் தொடர்ந்து நடை பெற்று வந்ததை, 1989 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட 7 ஊழியர்கள் கைது செய்யப்பட்டு இந்த அரசாலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரும் அங்கே இருக்கக்கூடிய கூட்டுறவுப் பதி வாளரும் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்த வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது. வேர்க்கடலை கொள்முதல் செய்வதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

பெருமாள் ஏரியை ஆழப்படுத்தும் திட்டம்

*2094. திரு. ந. கணேசமூர்த்தி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டம், கடலூர் வட்டம், குறிஞ் சிப்பாடி தொகுதியில் உள்ள நீர்ப்பாசன ஏரியான பெருமாள் ஏரியை ஆழப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.